**தலைப்பு 271 - மாவட்டச் செயலகம், திகோணமலை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

திகோணமலை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 29 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 22 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்ட செயலகத்தின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான ஏதாயினும் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் இவை மாவட்ட செயலகத்தின் வினைத்திறமையான உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிரயாயத்தினை தெரிவிப்பதற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதனை

  எனது கணக்காய்வின் போது இனம் கண்டு கொள்ளப்பட்ட குறைபாடு உட்பட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிககூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மாவட்டச்செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அல்லா சொத்துக்கள் தொடர்பாக 01 ஜனவரி 2019 ஆம் திகதியன்று நிலையான சொத்துக்களின் பெறுமதியானது மாவட்ட செயலக அறிக்கையின்படி ரூபா.1,566,195,878 ஆகவும் எனினும் அம் மீதி நிதி நிலைமைக் கூற்றின்படி ரூபா.1,636,948,492 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் ரூபா.70,752,614 வித்தியாசம் காணப்படுகின்றது. | திறைசேரியின் புத்தக மீதியுடன் நிதி நிலைமைக்கூற்று மீதி கட்டாயமாக இணங்குதல் வேண்டும். | சிகாஸ் (ஊஐபுயுளு) மென்பொருளில் ஏற்பட்ட தொழில்நுட்ப தவறு காரணமாக நிலையான சொத்தின் பெறுமதியானது திறைசேரி அரச கணக்குகள் திணைக்களத்தால் மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும் எமது பிரதான கணக்காளர் அரச கணக்குகள் திணைக்கள அதிகாரிகளுடன் இவ் விடயம் தொடர்பாக பல்வேறு தடவை சந்தித்து கலந்துரையாடி உள்ளார். இருப்பினும் இவ்விடயம் நிவர்த்தி |

செய்யப்படவில்லை.
இதன்படி 2019 பெப்ரவரி மாத திறைசேரி அறிக்கை பிரதியின் சொத்து மீதி மற்றும் மாவட்ட செயலக மீதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காணப்படுகின்றது.
இருப்பினும் மாவட்ட செயலக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதி சரியான மீதி என தெரியப்படுத்துகின்றேன்.

**1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று**

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றானது 2018 ஆம் ஆண்டு குறித்துரைக்கப்பட்ட மாதியினை கொண்டதாக காணப்படுவதுடன் அது 2019 டிசம்பர் 03 ஆம் திகதிய 271.∴.2019 எனும் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள (யுஊயு -(உ) எனும் மாதிரியில் தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆண்டுக்கான நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றானது அரச கணக்குகள் திணைக்களத்தின் 271.∴.2019 சுற்றறிக்கைக்கு அமைவாக தயாரித்தல் வேண்டும். | யுஊயு- (ஊ) மாதி படிவத்தில் 2019 ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய காசுப்பாய்ச்சல் கூற்றில் பெரியளவிலான எதுவித மாற்றங்களும் இல்லை என்பதை நான் தெரியப்படுத்துகின்றேன். |

**1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வழங்கப்பட வேண்டிய உத்தரவாதம்.**

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தர், நிதிப்படுத்தல் வேண்டும். வினைதிறன் உள்ளக கட்டுப்பாட்டு முறை உருவாக்கம், பரிசீலனை இவ் நோக்கத்திற்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறைப்படுத்தப்படும்.<br><br>அச்செயற்குழுவின் வினைத்திரன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீழ் மதிப்பீடுகளைச் செய்து அதன்படி அக்குழு வினைத்திறன் கொண்டதாக செயற்படத் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதாகவும் அக் கணிப்பீடுகள் எமுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் அவ்வாறான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை அது கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவுமில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பணியாற்றுதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வு பிரிவினரின் தொடர்ச்சியான நிதிகட்டுபாடுகளின் வினைத்திறன் தொடர்பான பரிசீலனை இவ் நோக்கத்திற்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் கொடுப்பனவு நடைமுறை தொடர்பாக நிதி பிரமானத்தின் கீழ் அதிகாரம் என்னால் பகிரப்பட்டுள்ளது, உள்ளக கணக்காய்வுக்கான செயல்திட்டம் மற்றும் கொடுப்பனவு தொடர்பான மறுசீரமைப்பு செயன்முறை என்பன எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். |

**1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயகக் குடியரசின் தாபன விதிக் கோவை. | | | | |
| (i) | அத்தியாயத்தின் 5.2.1. ஆம் பந்தி | 825,600 | வீட்டு வாடகை ஏற்பாடுகளுக்கமைவாக அறவிடப்படாமை | ஏற்பாடுகளுக்கமைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தொல்பொருள் திணைக்களத்திற்கு கட்டடமாக கானப்படுவதால் இவ் விடயம் தொடர்பாக அவர்களுக்க அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அத்துடன் அது எங்களது அலுவல அதிகார எல்லைகுள் கானப்படாமையினால் கட்டம் தொடர்பான குத்தகை நடைமுறை அல்லது சட்ட நடைமுறை எங்களால் மேற்கொள்ள முடியாது. |
| (ii) | ஓஓஐஐ அத்தியாயத்தின் 3.5 ஆம் பந்தி | 750,000 | மதிப்பீட்டு ஆண்டு காலப் பகுதியில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் கொடுப்பனவுகளின் போதான மூன்று சந்தர்ப்பங்களில் சம்பளத்தின் அதி கூடிய எல்லைக் கட்டுபாடான 40மூ மீறப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவை விதிமுறைகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் திருத்தப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>---------------------------<br>2013 ஒக்ரோபர் 07 ஆம் திகதிய 21∴2013 இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 2 (அ) | 614,608 | பொது விடுமுறை தினங்களில் வேலை செய்கின்ற உத்தியோகத்தர்கள் நாள் ஒன்றில் ஆகக்குறைந்தது எட்டு மணி நேர வேலையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும் கை விரல் அடையாளப்படுத்ம் இயந்திற்கு அமைவாக 11 உத்தியோகத்தர்கள் நாள் ஒன்றில் எட்டு மணித்தியாலயத்திற்கு குறைந்த நேரம் வேலை செய்துயள்ளனர் அவர்களுக்கு விடுமுறை கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. | கைவிரல் அடையாளத்தை உறுதிப்படுத்தும் இயந்திரம் மூலமாக வேலை நேரத்தினை உறுதிப்படுத்திய பின்னர் விடுமுறைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் இயந்திரம் பழுதடையும் சந்தர்ப்பத்தில் மிக விரைவில் அதனை சீர் செய்தல் வேண்டும். | உள்வருகை வெளிச்செல்லல் வரவு பதிவேட்டில் நேரத்தை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. |
| (இ) | 2019 டிசம்பர் 4 ஆம் திகதிய நிதி மற்றும் பொருளாதார கொள்கைகள் அமைச்சின் 07∴2019 இலக்க சுற்றறிக்கை | 1,753,035 | புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல், அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கட்டடங்களை வாடகைக்கு பெறுதல் என்பன அரச செலவின முகாமைத்துவத்தில் மற்றும் நிதி ஒழுங்கு விதியில் இடம்பெற முடியாது. இருப்பினும் மாவட்ட செயலகத்தினால் அலுவலக உபகர ணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | அரச செலவின முகாமைத்துவததின் பொருட்டு உரிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | நாளாந்த சேவையினை கொண்டு நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய 02∴. 2017 இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின | - | மூதூர் பிரதேச செயலகத்தில் காண ப்படுகின்ற ஏழு வாகனங்களுக்கான உரிமை தொடர்பான பதிவு இடம்பெறவில்லை. அத்துடன் உரிய சுற்றுநிருபத் திற்கு அமைவாக உரிமையினை பதி வதற்கான எந்தவித நடவடிக்கைை இதுவரை மேற்கொள்ளப்படவும் மில்லை. | உரிய சுற்றுநிருபத் திற்கு அமைவாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

**1.6.5 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா. 71,440,000 மதிப்பிடப்பட்ட பெறுமதி கொண்ட நீலபனிக்கன் குளம் வீதி தொடர்பான நிர்மான வேலைக்கான விலைமனு பத்திரம் ஆனது மாவட்ட செயலக தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு (வுநுஊ) மற்றும் பெறுகை குழு (ீஊ) ஆகியவற்றால் அனுமதிக்கப்பட வில்லை. | விலைமனு பத்திரம் ஆனது மாவட்ட செயலக தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு (வுநுஊ) மற்றும் பெறுகை குழு (ீஊ) ஆகியவற்றால் அனுமதிக்கப்படல் வேண்டும் | இச் செயற்றிட்டத்திற்கான ஒப்பந்தகாரர் தெரிவானது மாவட்ட செயலக தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு (வுநுஊ) மற்றும் பெறுகை குழு (ீஊ) ஆகியவற்றால் அனுமதிக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டில் கட்டு ரீதியானது திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட போது கட்டு நிதி விடிவிப்பு அறிவுறுத்தல் படிவம் (யுனஎயஉெந ழுக வாந சநடநயளந ழுக ைஅிசநளவ) அமைவாக விடுவிக்கப்படுகின்ற கட்டு நிதியாகது எந்த நோக்கத்திற்காக அல்லது செலவினத்திற்காக விடுவிக்கப்பட்டதே அந்த நோக்கத்திற்காக அல்லது செலவினத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும். இருப்பினும் ரூபா.96,117,643 ஆன தொகை ஜனாதிபதி செயலக செலவின தலைப்பு 01 மூலம் பெறப்பட்ட தொகைக்கும் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ள அதேநேரம் பொருளாதார கொள்கைகள், பொருளாதார விவகரங்கள் மற்றும் மீள்குடியேற்றம், புணர்வாழ்வு அமைச்சின் செவினத்தலைப்பு 104 மூலம் பெறப்பட்ட ரூபா.80,236,658 அன தொகை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | பெறப்படுகின்ற கட்டுநிதி எவ் நோக்கம் அல்லது செவினத்திற்காக பெறப்பட்டதோ அவ் நோக்கம் செலவிகத்திற்காக பயன்படுத்தல் வேண்டும். | வேறு வழிகளில் கிடைகப் பெறுகின்ற நிதியானது செயற்திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்தும் பொருட்டு வழங்குனர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவினத் தொகுதியில் உள்ளடங்கும் ஐந்து (05) செலவின வகுதிகளின் மொத்த ஒதுக்கீடு ரூபா.26,450,000 காணப்பட்டது. இருப்பினும் ரூபா.9,204,641 ஆண்டுத்தொகை மாத்திரம் மீளாய்வு ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. இதனால் ரூபா.17,245,359 ஆன தொகை | முறையான திட்டமிடமிடலை மேற்கொண்டு காலதாமதமின்றி செயற்பாடுகளை முன்னெடுத்து முறையான வரவு செலவுத் திட்ட கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்தல் வேண்டும். | கட்டு நிதி பற்றாக்குறை காரணமாகவே மூலதன செலவீனத்தில் சேமிப்பு உருவாகியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பாக காணப்படுகின்றது. இச் சேமிப்பு பரம்பலானது 100மூ தொடக்கம் 42மூ ஆக காணப்படுகின்றது. | | |
| (ஆ) | மீளாய்வு அண்டில் 271-1-1-0-2509 எனும் ஏனைய மூலதன செலவின வகுதிக்காக 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி ரூபா.1,350,000 குறை நிரப்பு ஒதுக்கீடாக பெறப்பட்டு, பெறப்பட்ட முழு தொகையும் செலவிடப்படாது சேமிப்பாக காணப்படுகின்றது. | செயற்திட்டத்தினை முறையாக திட்டமிட்டதன் பின்னர் அதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். | குறித்த செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டமையினால் ஒதுக்கீடு முழுவதும் சேமிக்கப்பட்டுள்ளது. |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள |
|---|---|---|---|
| (ஆ) | நி.பி.208 இங்கு அமைவாக ஒவ்வொரு உத்தியோகத்தரின் பிரதான பொறுப்பாக அமைவது வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களால் வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுகளை சிறந்த முறையில் பயன்படுத்துதல் வேண்டும். இதற்கமைய எட்டு (8) அமைச்சுக்கள் திணைக்களங்களால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா.897,386,975 ஒதுக்கீட்டில் ரூபா.485,996,867 மட்டுமே மீளாய்வு ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. மிகுதி ரூபா.411,390,108 சேமிப்பாக காணப்படுகின்றது. இதற்கமைய சேமிப்பின் வீச்சானது 61மூ இலிருந்து 31மூ ஆக காணப்படுகின்றது. | கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து உயர்ந்த பயன்பாட்டினை பெறக்கூடிய வகையில் செயற்பாடுகளினை உரிய முறையில் திட்டமிடுதல் வேண்டும். | திறைசேரியில் இருந்து கோரப்பட்ட நிதி கிடைக்கப் பெறாமையில் குறித்த சேமிப்பு உருவாகியுள்ளது. |

**2.4 வரி தேவைப்பாடுகளுக்கு இனங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 18 ஆம் திகதிய 24/2017 இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கையின் பிரிவு 85 இற்கு அமைவாக 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி (ீயுலுநு) ரூபா.176,567 ஆன தொகை உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படவில்லை. மற்றும் அது உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். | உள்நாட்டு இறைவரி திணைக்கள சட்டத்தின் பிரகாரம் உழைக்கும் போது செலுத்தப்படும் வரி (ீயுலுநு) உரிய காலத்திற்கு அறவிடப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்கள சட்டம் அமுல்படுத்திய போது சில பிரச்சினைகள் காரணமாக உழைக்கும் போது செலுத்த வேண்டியவரி (ீயுலுநு) அறவிடப்படவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 உள்நாட்டு நிதியிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜனவரி 12 ஆம் திகதிய ீர்.ோ.நேுஊயு.ோ.2019.ோ.01 எனும் இலக்கம் உடைய சிறைச்சாலைகள், புணர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரின் கடிதம், 2016 செப்டம்பர் புயுவு.ோ.நுளுவு.ோ.சுநுளுநுவு.ோ.ர்ழர.ோ.ஏ ழுடு-ஐஐ.ோ.2016 எனும் இலக்கம் உடைய மாவட்ட செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், மீள்குடியேற்றம் இடம் பெற முன்னர் திருமணம் முடிந்த கிளை குடும்பங்கள் பயனாளிகள் தெரிவில்லை இடம்பெற முடியும் என்பதுடன் யுத்தத்தினால் ஊனமுற்றோர் பயனாளிகளாக | உரிய சுற்றிக்கைக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய பயனாளிகள் தெரிவுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவில் இடம் பெறமுடியும். இருப்பினும் திருகோணமலை பட்டினமும் சுழலும் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வீட்டுத்திட்ட பயனாளி தெரிவின் போது மீள்குடியேற்றத்தின் பின்னர் திருமணமான குடும்பங்கள் கிளை குடும்பங்களாகவும் இயற்கையாகவே ஊனமுற்றோர் ஊனமுற்றோராகவும் கருதப்பட்டு பயனாளி தெரிவு இடம்பெற்றுள்ளது. | | |
| (ஆ) | பொருளாதார கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மிள்குடியேற்றம் மற்றும் புணர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி, மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் ஒதுக்கீட்டில் 2016, 2017 மற்றும் 2019 ஆண்டுகள் 2,150 மில்லியன் நிதி வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக திருகோணமலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய கின்னியா, மூதூர், தம்பலகாமம், வெருகல் ஆகிய நான்கு பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வுகளின் போது உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் குறித்த பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இடம்பெறவில்லை. | இச் செயற்திட்டமானது மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டு திட்ட வசதியினையும் அவர்களது வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதற்கான வசதியை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இருப்பினும் 10 வருடம் முடிவடைந்தும் இச் செயற் திட்டம் அதன் இலக்கினை அடையவில்லை. ஆகவே இச்செயற்திட்டத்தினை அதன் இலக்கினை இணைத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும். | சில காரணங்களால் இச் செயற்திட்டமானது நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினை அடைய முடியாமல் காணப்படுகின்றது. அவ்வாறான பயனாளிகள் பயன்படுத்தப்படாத வீடுகளை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். ஆகக்கூடிய சந்தர்ப்பங்களின் வாழ்வாதார பயனாளிகள் பிரதேச செயலகங்களால் கண்காணிக்கப்படுகின்றனர். ஒட்டு மொத்த வீட்டு தேவையினை பூர்த்தி செய்வதற்கான நிதி பற்றாக்குறை காணப்படுகின்றது. |
| (இ) | பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்தின் கூடாக மீள்குடியேற்ற பயனாளிகள் தெரிவுக் குழு உறுப்பினர்கள் மற்றும் மேன் முறையீட்டு பரிசீலனை குழு உறுப்பினர்கள் ஒரே உறுப்பினர்களாகக் கானப்படுவதால், பொருத்தமான பயனாளி தெரிவு செய்யப்படுகின்றார்களா என்பது தொடர்பில் கேள்விக்குரிய விடயமாக காணப்படுகின்றது. | மேன்முறையீட்டு செயன்முக்காக வேறு குழு தொரிவு செய்யப்படல் வேண்டும் | பயனாளி தெரிவு மேற்கொள்ளப்பட்ட குழுவின் ஊடக மேன்முறையீடு பரிசீலிக்கப்பட்டது. |

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| குறைந்த விலை மனுதாரரை தெரிவு செய்வதென்பது சாதாரனதேர் விடயமாகும். அரசாங்க பெறுகை வழிகாட்டி 7.9.11 (அ) அமைவாக, நீலபனிக்கன் குளம் வீதி நிர்மான வேலை தொடர்பான விலை மனுதாரர் முக்கியமான அல்லது மிகமுக்கியமான உபஅலகுகளில் திட்டவெட்டமான குறைந்த பெறுமதியினை குறிப்பிட்டால், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு (வுநுஊ) நிச்சயமாக குறித்த ஒப்பந்தகாரர் தொடர்பாக திருப்தி அடைந்து தொரிவினை மேற்கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 55,000,000 ஒப்பந்த பெறுமதி உடைய நீலபனிக்கன் குளம் வீதி நிர்மான வேலை தொடர்பான ஒப்பந்தகாரர் தொரிவின்போ இவ் விடயம் கருத்தில் கொள்ளப்படவில்லை. மேலும், ஒப்பந்தகாரருக்கு குறைந்தளவிலான முன் அனுபவம் கானப்பட்டதன் காரணமாக தனக்கு சாதகமான விடயத்தை மாத்தரமே அவரால் மேற்கொள்ள முடிந்தது அத்துடன் ஒப்பந்த வேலையின் 98 சதவீத வேலைகள் ர்த்தி செய்யப்படவில்லை. | ஒப்பந்த காரர் சரியான முறையில் தெரிவு செய்யப்பட்டு தொரிவு செய்யப்பட்ட வேலை உரிய நேரில் முடிவுறுத்தப்படல் வேண்டும். | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த விலையானது நியாயமானதாக கானப்படுவதுடன் மாவட்ட செயலக விலைகளின் அடிப்படையில் தொழினுட்ப மற்றும் பெறுகை குழுவினால் விலை மதிப்பீடு செய்யப்பட்து. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட வாகனம் சம்பந்தமாக 2015 ஜீலை 10 திகதிய 02.∵.2015 இலக்க அரச நிதி திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01.∵.2018 சுற்றறிக்கைக்கு அமைவாக பயன்படுத்தப்பட்டதன் பின் கிடைக்கப்பெற்ற 06 வாகனங்கள் அப்புறப்படுத்தப்படாமல் 2016 ஆம் ஆண்டில் இருந்து மாவட்ட வெயலகத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு அமைவாக மிக விரைவல் அகற்றி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வாகனங்கள் தொடர்பான வேலைகள் மிக விரைவல் அகற்றி முடிக்கப்படும் |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகரத்திலிருந்து நீண்ட துூரத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்காக நீண்ட காலம் காத்திருப்போருக்கு, ஐந்து (05) வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்ற கொள்கை இன்மையால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. | இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஐந்து (05) வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்ற செயமுறையில் உள்ளனர். |
| (ஆ) | இலங்கை சோசலிச குடியரசின் 2012 டிசம்பர் 17 ஆம் திகதிய 1789 அதிவிசேட – வர்த்தமானி, 2018 டிசம்பர் 31 ஆம் திகதி 2014.∵.05 அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் மதுபான உரிமை கட்டளை மீதான முத்திரை வரி ரூபா.114,000 ஆன தொகை 2018 மற்றும் 2019 காலப்பகுதியில் அறவிடப்படவில்லை. | பொருத்தமான வர்தமானிக்கு அமைவாக முத்திரைவரி அறவிடப்பட வேண்டும். | வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாரு முத்திரை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2002 தொடக்கம் 2014 ம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட செலயக மற்றும் பிரதேச செயலகம் காணப்பட்ட 07 வாகனங்களின் விபத்து காரணமாக ஏற்பட்ட இழப்பின் மதிப்பீட்டுப் பெறுமதி 2,472,079. எவ்வாறாயினும் இவ் விபத்து தொடர்பான முறையான விசாரணை இடம்பெற்ற காலதாமதம் ஏற்பட்டுள்ளது, தொடர்புடைய பெறுமதியினை அறவிடுவதற்கான எந்தவித நடவடிகியும் மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்து. | இந்த விபத்துக்கள் ஏற்பட்டு நீண்ட நாள் கடந்தும் இழப்புகளை மற்றும் தொடர்பாக கட்டனங்களை அறவிடுவிடுதல் தொடர்பாக விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளபடல் வேண்டும். | இவ் விபத்துக்கள் தொடர்பான ஆவனங்கள் பெறுவது தொடர்பில் சிக்கல் நிலமை கானப்படுகின்றது மற்றும் பொறுப்புவாய்த்த தரப்பினரிமிருந்து இழப்பீட்டை பெறுவது தொடர்பாகவும் மேலதிக நடவடிக்கைக்காக உரிய அமைச்சுக்களுக்கு முறையாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | துப்பரவு சேவைக்கான செலவினம் மற்றும் அரச கட்டங்கள் தொடர்பான வாடகை வருமானம் ரூபா.1,350,260 ஆல் குறைத்து காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் மற்றைய ஆண்டு மார்ச்மாதம் தொடக்கம் மார்ச் 2020 வரையான மாவட்ட செயலக துப்பரவு – செலவினம் (271-01-01-1303) ரூபா.1,350,260 அரசாங்க கட்டடி வாடகை வருமானத்தில் (2020-01-01) இருந்து நேரடியான வைப்பு கணக்கின் ஊடாக செலவு செய்யப்பட்டுள்ளது. | அரசாங்க வருமானம் மற்றும் செலவினை முறையாக கணக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கட்டிட வாடகை வருமானம் துப்பரவு சேவை செலவினை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. |

## 4 நிலைபேறான இலக்குகள் அடையப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறுடைய இலக்குகள் பற்றி உத்தியோகத்தர்களுக்கு போதுமான அளவு தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை. என்பதுடன், நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள் சரியான முறையில் இனங் கானப்படாமையினால் மீள் மதிபீட்டாண்டில் இவ் இலக்குகளை அடைந்தமை தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ள முடியவில்லை. | நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றினை நடைமுயைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை சரியான முறையில் ஒழுங்குபடுத்தல், வளங்களின் உச்ச பாவனையின் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கான செயற்றிறன் அபிவிருத்தி பயிர்ச்சிகளை வழங்குதல் வளத்தை நிர்வகித்தல் மற்றும் பொதுத்துறை சட்டபூர்வமான வேலைக்குள்ளான சூழலை வலுப்படுத்துதல். இது நிலையான |

| | | அபிவிருத்தி இலக்குகளை அடைய தேவையான பின்னணியை வழங்கியுள்ளது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. |
|---|---|---|

**5 மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிறைவேற்று அலுவலகர் மட்டத்தின் 20 பதவி வெற்றிடங்களுக்கும், மூன்றாம் நிலை அலுவலகர் மட்டத்தின் 19 பதவி வெற்றிடங்களுக்கும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தின் 186 பதவி வெற்றிடங்களுக்கும் மற்றும் ஆரம்ப நிலை அலுவலகர் மட்டத்தின் 32 பதவி வெற்றிடங்களுக்குமாக மொத்தமாக 257 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | முன்னுமை அடிப்படையில் அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டடும். | தொடர்புடைய நிறுவனங்களுக்கு பதவி வெற்றிடங்கள் தொடர்பாக தொரியப்படுத்தப்பட்டுள்ளது. |